**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 458, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**458—**

## நியாய விலைக் கடை

***3677—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதியில் கண்ணமங்கலம் பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தில் நியாய விலைக் கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதி, கண்ணமங்கலம் பேரூராட்சியில், திருவண்ணாமலை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் கட்டுப்பாட்டின்கீழ், கற்பகம்–I மற்றும் கற்பகம்–II ஆகிய இரு முழுநேர நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன.*

*முற்பகல் 10–25*

*இந்நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அடி மனைகள் இல்லை. எனவே, கண்ணமங்கலம் பேரூராட்சியில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. இட ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும், இந்நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2013 மே 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நான் எழுப்பிய உடுக்குறியிடாத வினாவிற்கு, ஆரணி நகராட்சியிலே மூன்று பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைத்துத் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்ணமங்கலம் பேரூராட்சியிலே, கடந்த 2012–2013 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. அப்போதும் இதே பதிலைத்தான் மாவட்ட நிருவாகம் சொன்னது. அதாவது, இடம் இல்லை என்ற காரணம். எனவே, இடத்தை உடனடியாக அங்கே ஏற்பாடு செய்து புதிய கட்டடம் கட்டித் தரவும், செய்யாறு ஒன்றியத்திலே நாவல்பாக்கம் உள்வட்டத்திலே 2 புதிய நியாய விலைக் கடைகளை கடுகளூர் மற்றும் செங்கம்பூண்டியில் அமைத்துத் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட 2 முழுநேர நியாய விலைக் கடைகளுக்கும் இடம் கேட்டு பேரூராட்சிக்குக் கடந்த 11–1–2012 அன்று முன்மொழிவு வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை எந்தவித பதிலும் இல்லாததால், கடந்த 27–2–2013 அன்று நினைவூட்டுக் கடிதமும் வேலூர் மண்டல பேரூராட்சிகளினுடைய உதவி இயக்குநருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவிலே இடம் கிடைத்தவுடன், உறுதியாகக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரணி பகுதியில் பகுதிநேரக் கடைகள் கேட்டிருக்கிறார்கள். சட்ட விதிகளுக்கு உட்பட்டு, கடைகளைப் பிரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, ஆரணி தொகுதியிலே, மேற்கு ஆரணி ஒன்றியத்திலே, ஒன்னுபுரம் பஞ்சாயத்திற்குட்பட்ட தேவாங்கபுரம், முருகமங்கலம் பஞ்சாயத்திற்குட்பட்ட மூங்கில்தாங்கல், பாளை ஏகாம்பரநல்லூர் பஞ்சாயத்திற்குட்பட்ட சி.சி. ரோடு ஆகிய பகுதிகளிலே, விதிமுறைகளுக்குட்பட்டு 150 குடும்ப அட்டைகளுக்கு மேலும், ஒன்றரை கிலோ மீட்டருக்கு தொலைவிலும் இருக்கின்ற கடைகளைப் பிரித்து, பகுதிநேர நியாய விலைக் கடைகளை அமைத்துத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஆரணி நகராட்சியிலே 6 கூட்டுறவு நியாய விலைக் கடைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்தக் கூட்டுறவுக் கடைகளுக்கு இடம் இருக்கின்றது. கட்டடங்கள் இல்லை. எனவே, அந்த இடத்திலே புதிய கட்டடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பதவி ஏற்றதற்குப் பிறகு, அவர் கேட்டதற்கிணங்க, 1–6–2011–க்கு பிறகு 4 பகுதிநேரக் கடைகள் அவருடைய தொகுதியிலே திறக்கப்பட்டிருக்கின்றன. அதே மாதிரி, இப்போதும் நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொன்னதுபோல, விதிகளுக்கு உட்பட்டு, கடை திறக்கும் வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், உறுதியாக கடை திறக்கப்படும். சொந்த இடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சங்கத்திற்குச் சொந்த இடம் இருக்கும்பட்சத்தில், மாவட்ட ஊராட்சி முகமையினுடைய வளர்ச்சி நிதியிலிருந்து நிதி பெற்றோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தாராளமான தொகுதி மேம்பாட்டு நிதியைப் பெற்றோ உறுதியாகக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்*

*அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 459, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் மற்றும் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**459—**

**வனத் தீயைத் தடுத்தல்**

***8978—திரு. ரா. சரத்குமார்:**
**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வனத் தீயினைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தமிழக வனப் பகுதிகளில் தீப்பிடிப்பதைத் தடுக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது:*

*தீத்தடுப்புக் கோடுகள் வெட்டுதல், தீ எச்சரிக்கை மையங்கள் மற்றும் தீத்தடுப்புக் கோபுரங்கள் அமைத்தல், கிராம வனக் குழுக்களுக்குத் தீத்தடுப்புப் பயிற்சி அளித்தல், தீத்தடுப்புக் காவலர்களால் ரோந்துப் பணி மேற்கொள்ளுதல், நீர்த்தேக்க அமைப்புகளை உருவாக்குதல், தீத்தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல், தீத்தடுப்பு உபகரணங்கள் வழங்குதல், தொலைநோக்குக் கருவிகள்மூலம் தீத்தடுப்புக் கோபுரங்களிலிருந்து தீ நிகழ்வுகளைக் கண்காணித்தல் மற்றும் விரைவு தீத்தடுப்பு ரோந்துக் குழுமூலம் தீத்தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின்மூலம் தமிழக வனப் பகுதிகளில் தீப்பிடிப்பது தடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*